இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 208 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மாசி 25 – ஞாயிற்றுக்கிழமை 09 மார்ச் 2025 – சென்னை 24 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 208 : Thiruvalluvar Year - 2056 - Maasi 25 - Sunday 09 March 2025 - Chennai 24 Pages ₹ 5.00




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் உலக மகளிர் தினத்தையொட்டி நேற்று (8.3.2025) சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், பெண்களின் முன்னேற்றத்திற்கு சிறந்த சேவை புரிந்து வரும் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் முனைவர் யசோதா சண்முகசுந்தரம் அவர்களுக்கு 2025ஆம் ஆண்டிற்கான ஔவையார் விருதினை வழங்கி, சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் திருமதி. பி.கீதாஜீவன், திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், மேயர் திருமதி. ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் கேரம் உலக சாம்பியன் செல்வி. காசிமா, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளி திருமதி. எலிசபத், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர் திருமதி. நிர்மலா, புதுமைப் பெண் மற்றும் நான் முதல்வன் திட்டத்தில் பயன்பெற்ற மாணவி செல்வி பவானி, உயர்கல்வி உதவித் தொகை பெற்று அயல்நாடு சென்று பயின்ற மாணவி செல்வி நித்யஸ்ரீ மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் உலக மகளிர் தினத்தையொட்டி நேற்று (8.3.2025) சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், 1000 மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு பல்வேறு பயன்களைத் தரக்கூடிய அடையாள அட்டைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் திருமதி. பி.கீதாஜீவன், திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், மேயர் திருமதி. ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.

## மகளிர் உயர மாநிலம் உயரும்!

# உலகம் மகளிர்க்கானது ; மகளிர்க்கான சாதனைகள் தொடரும்!

## உலக மகளிர் தினவிழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துரை!

**சென்னை, மார்ச் 9 -**

**உலக மகளிர் தினத்தையொட்டி நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்தி உரையாற்றும்போது "மகளிர் உயர மாநிலம் உயரும்! உலகம் மகளிர்க்கானது; மகளிர்க்கான சாதனைகள் தொடரும்" என்று கூறினார்.**

இவ்விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

மார்ச் 1 என்னுடைய பிறந்தநாள்; மார்ச் 8 உலக மகளிர் நாள்! மகளிர் நாள் கொண்டாடப்படுகின்ற இதே மார்ச் மாதத்தில் பிறந்தவன் என்பதை நினைத்து மகிழ்ச்சியும், பெருமையும் நான் அடைகிறேன்.

சமூகத்தின் சரிபாதியான மகளிருக்கான நாள் இது. "இங்கே ஆண்களுக்கு என்ன வேலை?" என்று யாரும் கேட்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். "தாயில்லாமல் நானில்லை" என்று சொல்லத்தக்க வகையில், "பெண்கள் இல்லாமல் ஆண்கள் இல்லை" என்பதை உணர்ந்த ஆண்கள் நாங்கள் என்பதால், உங்களோடு சேர்ந்து உலக மகளிர் நாள் விழாவில் கலந்து கொண்டு இருக்கிறோம்.

### திராவிட இயக்க ஆட்சிக் காலங்களில் பெண்களுக்கு உரிமைகள் மீட்டுத்தரப்பட்டது!

திராவிட இயக்கத்தின் அடிப்படை நோக்கமே இரத்த பேதம் இல்லை, பால் பேதம் இல்லை என்பது தான்! அதுவே முழுமையான சமூக நீதி! திராவிட இயக்கத்தை உருவாக்கிய பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள், வாழ்நாளெல்லாம் பெண் விடுதலைக்காக உழைத்தார். மனித வர்க்கத்திற்கு அடிமைத் தத்துவம் ஒழிய வேண்டும் என்றால், பெண்ணை அடிமையாக நினைக்கின்ற எண்ணம் ஒழிந்தால்தான் முடியும் என்று சொன்னார்! அதனால்தான், திராவிட இயக்க ஆட்சிக் காலங்களில் பெண்களுக்கு உரிமைகள் மீட்டுத் தரப்பட்டது!

திராவிட இயக்கத்துக்கு ஆதி விதையான நீதிக்கட்சி ஆட்சியில்தான் பெண்களுக்கு முதன்முதலாக வாக்குரிமை தரப்பட்டது. பெரியார் வழித்தடத்தில் வந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் சுயமரியாதை திருமண சட்டத்தை நிறைவேற்றினார். பெரியார் போட்ட தீர்மானத்தை சட்டமாக்கி சொத்துரிமை தந்தவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்! மேலும், காவல்துறையில் மகளிர், மகளிர் சுய உதவிக் குழுக்கள், மகளிருக்கு உள்ளாட்சி அமைப்புகளில் 33 விழுக்காடு இடஒதுக்கீடு என்று பல முற்போக்குத் திட்டங்களை கொண்டு வந்தார்.

● நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், புதுமைப் பெண், விடியல் பயணம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, மக்களைத் தேடி மருத்துவம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டங்களில் மகளிர் சுய உதவிக் குழுவினரை பங்கு பெறச் செய்திருக்கிறோம்.

● பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் மற்றும் குழந்தை திருமணங்களை தடுத்து அவர்களை பாதுகாக்க 'பாலின வள மையங்கள்'!

● உள்ளாட்சியில் பெண்களை அதிகாரம் மிக்கவர்களாக உயர்த்த, 50 விழுக்காடு பெண்களுக்கு ஒதுக்கீடு வழங்கினோம்! அதில் வெற்றி பெற்றதில் 70 விழுக்காட்டுக்கும் மேற்பட்டவர்கள் சுய உதவிக் குழு மகளிர்தான்!

● வேலை செய்யும் பெண்கள் பாதுகாப்பாக தங்குவதற்கு நாம் தொடங்கிய தோழி விடுதிகளுக்கு பெரிய வரவேற்பு கிடைத்திருக்கிறது.

● இந்த நிகழ்ச்சியின் மூலமாக நான் அறிவிக்க விரும்புவது, புதிதாக காஞ்சிபுரம், ஈரோடு, தர்மபுரி, சிவகங்கை, தேனி, கடலூர், நாகை, ராணிப்பேட்டை, கரூர் ஆகிய ஊர்களில் 72 கோடி ரூபாயில், 700 படுக்கைகளுடன் புதிய தோழி விடுதிகள் அமையும். அதுவும், 24 மணிநேரமும் பாதுகாவலர், பயோமெட்ரிக் நுழைவு முறை, வைஃபை வசதி, R.O. முறையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் என்று பல வசதிகளுடன் அதை அமைக்க இருக்கிறோம்.

நான் எங்கே சென்றாலும், அங்கே கூடுகின்ற கூட்டத்தில் அதிகம் இருப்பது பெண்கள்தான். "பெண்களின் உரிமையை அனைத்து தளங்களிலும் உறுதி செய்கின்ற ஆட்சியாக, கோரிக்கைகள் வைக்காமலேயே நிறைவேற்றுகின்ற ஆட்சியாக நம்முடைய திராவிட மாடல் ஆட்சி இருக்கிறது" என்று நீங்கள் பாராட்டுகிறீர்கள். அந்த தருணம், "இதுதான் ஆட்சியின் பலன் இதற்காகத்தான் ஆட்சிக்கு வந்தேன்" என்று நினைத்து, நினைத்து நான் பூரிப்படைகிறேன்.

### சென்னை மாநகரில் பெண்களுக்கு பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது!

இந்த நிகழ்ச்சி அரங்குக்கு நான் வருவதற்கு முன்னால், விழா அரங்கின் வாயிலில், 250 ஆட்டோக்களை பயனாளிகளுக்கு வழங்கி கொடியசைத்து துவக்கி வைத்துவிட்டு தான் வந்திருக்கிறேன்.

சென்னை மாநகரத்தில், பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்கின்ற விதமாகவும், பெண்களுக்கு சுய வேலைவாய்ப்பை உருவாக்குகின்ற விதமாகவும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், தலா ஒரு இலட்சம் ரூபாய் அரசு மானியத்துடன் 250 பெண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு பிங்க் நிற ஆட்டோக்களை வழங்கி இருக்கிறோம். இதில், காவல்துறை உதவி எண்களுடன் இணைக்கப்பட்ட GPS கருவியும் பொருத்தப்பட்டிருக்கிறது.

இந்த சிறப்புமிகு விழாவில், 1000 மகளிர் சுய உதவிக் குழு சகோதரிகளுக்கு நான் அடையாள அட்டைகளை வழங்கி இருக்கிறேன். அதன் பயன்கள் என்ன தெரியுமா?

● கிராம மற்றும் நகரப் பேருந்துகளில், சுய உதவிக் குழுவினர் தாங்கள் தயாரிக்கின்ற பொருட்களை 25 கிலோ வரை கட்டணமின்றி எடுத்துச் செல்லலாம்.

● முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத்திட்டத்தில் பதிவு செய்தவர்கள் பயன்களைப் பெறலாம்.

● கூட்டுறவு வங்கிகள் மூலமாக பெறப்படுகின்ற பல்வேறு கடன்கள் பெற முன்னுரிமை.

● கோ-ஆப் டெக்ஸ் பொருட்களுக்கு 5 விழுக்காடு கூடுதல் தள்ளுபடி.

● ஆவின் பொருட்களுக்கு குறைந்த விலை.

● இ-சேவை மையங்களில், 10 விழுக்காடு சேவைக் கட்டணம் குறைவு. இதையெல்லாம் சிறந்த முறையில் பயன்படுத்தி நீங்கள் வளம்பெற வாழ்த்துகிறேன்.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் உலக மகளிர் தினத்தையொட்டி நேற்று (8.3.2025) சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு முழுவதும் 34,073 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 4,42,949 மகளிருக்கு 3,190.10 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்புகள் வழங்குவதை தொடங்கி வைக்கும் விதமாக, சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் செயல்படும் 3,584 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 46,592 மகளிருக்கு 366.26 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் திருமதி. பி.கீதாஜீவன், திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், மேயர் திருமதி. ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**நான் எங்கே சென்றாலும், அங்கே கூடுகின்ற கூட்டத்தில் அதிகம் இருப்பது பெண்கள்தான். "பெண்களின் உரிமையை அனைத்து தளங்களிலும் உறுதி செய்கின்ற ஆட்சியாக, கோரிக்கைகள் வைக்காமலேயே நிறைவேற்றுகின்ற ஆட்சியாக நம்முடைய திராவிட மாடல் ஆட்சி இருக்கிறது" என்று நீங்கள் பாராட்டுகிறீர்கள். அந்த தருணம், "இதுதான் ஆட்சியின் பலன் இதற்காகத்தான் ஆட்சிக்கு வந்தேன்" என்று நினைத்து, நினைத்து நான் பூரிப்படைகிறேன்.**